[17th August 1963

ஞர்களைக் கொண்டு வழக்காட முடியாத ஏழைகளுக்கு அரசாங்கம் வழக்கறிஞர்களை அமர்த்தித் தரும் திட்டம் இப்போது எந்நிலையில் உள்ளது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வழக்கறிஞர்களைக் கொண்டு வழக்காட முடியாத ஏழைகளுக்கு வழக்கறிஞர்களை அமர்த்தித் தரும் திட்டம் இன்னும் அரசாங்கத்தின் யோசனையில் இருந்து வருகிறது.

The scheme for giving Legal Aid to the Poor by the State Government is still under the consideration of the Government.

புலவர் கா. கோவிந்தன் : அந்தத் திட்டம் நீண்ட காலமாகவே அரசாங்கத்தின் பரிசீலனையில் இருப்பதாகத் தெரிகிறது. எப்போது அமலுக்குக் கொண்டு வரப்படும் என்றாவது தெரிவிப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது விடை அளிக்க வேண்டும் என்றால் நெருக்கடி நிலைமை தீர்ந்த பிறகு எடுத்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

Official Correspondence in Tamil

* 180 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state the details of the programme for the adoption of Tamil as the medium of official correspondence in the offices above the District level ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government have decided to introduce the scheme of Tamil correspondence in the offices of the Heads of Departments and Regional offices in convenient stages. Accordingly, a partial scheme has been introduced in the offices of most of the Heads of Departments and certain Regional Offices. Only the first stage of this scheme has been implemented now in these offices, under which communications received in Tamil from the members of the general public will be replied to in Tamil, while those received in other languages will be replied to in English subject to the orders issued from time to time by the Government in regard to the safeguards for Linguistic Minorities. The introduction of the remaining stages will be staggered to the extent necessary. The scheme can be introduced in the Departments of the Secretariat only after the scheme is fully implemented in the offices of the Heads of Departments.

துறைத் தலைவர்களின் அலுவலகங்களிலும் பிராந்திய அலுவலகங்களிலும் தமிழில் கடிதப் போக்குவரத்து நடத்தும் திட்டத்தை வசதியான நிலைகளில் படிப்படியாக நிறைவேற்ற அரசினர் முடிவு செய்துள்ளனர். அவ்வண்ணமே, பெரும்பாலான துறைத் தலைவர்களின் அலுவலகங்களிலும் சில பிராந்திய அலுவலகங்களிலும் இத்திட்டத்தின் ஒரு பகுதி அமலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த அலுவலகங்களில் இத்திட்டத்தின் முதல் கட்டமே இப்போது அமலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தின்கீழ், பொதுமக்கள்

17th August 1963]

தமிழில் எழுதும் கடிதங்களுக்குப் பதில் தமிழிலேயே அனுப்பப்படும். மற்ற மொழிகளில் எழுதப்படும் கடிதங்களுக்கு ஆங்கிலத்தில் பதில் அனுப்பப்படும். சிறுபான்மை மொழியினரின் நலனைப் பாதுகாப்பதற்காக அரசினர் அவ்வப்போது பிறப்பிக்கும் ஆணைகளுக்குட்பட்டு, இந்த முறை பின்பற்றப்படும். இத்திட்டம் துறைத் தலைவர்களது அலுவலகங்களில் முற்றிலும் நிறைவேற்றப்பட்ட பிறகே, செயலகத் துறைகளில் இதனை அமலுக்குக் கொண்டு வர முடியும்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் அமலில் இருக்கிற காரணத்தினால் எந்த அளவுக்கு இது வெற்றிகரமாக நடந்திருக்கிறது என்று பரிசீலிக்கப்பட்டிருக்கிறதா ? இதைப் பரிசீலித்து மேலும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த வழி வகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது நிறைவேற்றப்பட்டுக் கொண்டு வரும்போதே பரிசீலிக்கவில்லை. இது திருப்திகரமாகத்தான் நடைபெற்றுக்கொண்டு வருகிறது. திருப்திகரமாக இல்லை என்று சொல்வதற்கில்லை. சீக்கிரத்தில் முற்றிலும் அமலுக்குக் கொண்டுவரவேண்டும் என்ற லட்சியத்தை வைத்துக்கொண்டு அதைச் சீராகக் கொண்டுவரவேண்டும் என்று படிப்படியாகக் கொண்டுவரப்படுகிறது.

திரு. சா. கணேசன் : இந்தத் திட்டம் திருப்திகரமானதாக இருக்கிறது என்று சொல்லும்போது, இதை வளர்த்து, சீராகக் கொண்டு வந்தால் இன்னும் எவ்வளவு காலத்திற்குள் ஒரு முழு நிறைவைப் பெறும் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒவ்வொரு கட்டத்திலும் இதை மேலும் விஸ்தரிப்பதற்கு முன் இது சீராக நிறைவேற்றப்படுமா என்று பார்க்கவேண்டும். மிகவும் நேரடியான மொழிபெயர்ப்புகள் வேண்டியிருக்கிறது. அதில் தவறுகள் ஏற்பட்டு விடக்கூடாது. ஏதாவது தவறான வார்த்தைகள் போட்டு, அதுவே பழக்கத்துக்கு வந்துவிடுமானால், இந்தத் திட்டமே சரியாக நடைபெறவில்லை என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகும் நிலை ஏற்படும். இதை நல்ல முறையில் கொண்டுவர, எவ்வளவு துரிதமாகக் கொண்டுவர முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் கொண்டுவர கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இதில் கால வரம்பு வைத்து இந்த கால கட்டத்துக்குள் முற்றிலும் நிறைவேற்றப்படும் என்று சொல்வதற்கில்லை. நான் முன்பே கூறியது போல எவ்வளவு சீக்கிரத்தில் கொண்டுவர முடியுமோ அதில் அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது.

திரு. கரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, தமிழ் ஆட்சி மொழிக் குழுவின் நடவடிக்கைகள் ஆங்கிலத்தில் நடைபெறுகிறது என்பது உண்மையா ?

[17th August 1963

கனம் திரு எம். பக்தவத்சலம் : ஆங்கிலத்திலும் நடைபெறுவது தான். தமிழிலும் நடைபெறுவதுதான்.

திரு. ஜே. மாதா கவுடர் : துறைத் தலைவர், செய்தித் துறைத் தலைவர் என்றெல்லாம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதெல்லாம் சாதாரண மக்களுக்கு, கிராம மக்களுக்குப் புரியாமல் இருக்கிறதே, எளிய முறையில் தமிழிலே எழுத அரசாங்கம் அதைப் பற்றி ஆலோசிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எளிய முறையில் இருந்தால் நலம்தான். அதற்கு கனம் அங்கத்தினரே யோசனை கூறினால் அதையும் அரசாங்கம் பரிசிலனை செய்யலாம்.

Rest House in Mudumalai Sanctuary.

* 181 *Q.*—Sri S. MADHAVAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(*a*) whether there is any proposal to construct a Rest House with a dormitory at Mudumalai Sanctuary; and

(*b*) if so, when the scheme is likely to start ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) ஆம்.

(இ) இத் திட்டம் பூர்வாங்க நிலையில் உள்ளது. இத் திட்டத்திற்காக நிதிவசதி கிடைக்குமா என்று இந்திய அரசாங்க டூரிஸ்ட் இலாகாவைக் கேட்க உத்தேசித்திருக்கிறோம். அந்த இலாகாவினர் நிதி உதவி அளிக்க இசைந்தால்தான் இத் திட்டத்தை நிறைவேற்ற முடியும்.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இதற்காக ஏற்கெனவே சர்க்காரில் திட்டம் போடப்பட்டிருக்கிறதா ? எவ்வளவு செலவாகும் என்று ஒதுக்கப்பட்டது ? அதன் விவரம் என்ன ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : சர்க்காரில் ரூபாய் 1,20,000 போட்டு 40 படுக்கைகள் கொண்ட 20 ரூம்கள் கட்டுவதாக இருந்தது. நெருக்கடி காரணமாக ஒத்தி வைத்து செண்ட்ரல் டூரிஸ்ட் இலாகா மூலமாகக் கிடைக்குமா என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : ஸார், திராவிட முன்னேற்றக் கழகத்தார், குளு குளு ஊட்டிக்கு வரமாட்டேன் என்று முன்னால் சொல்லிக்கொண்டிருந்தார்கள். இப்போது அவர்கள் ஊட்டிக்கு வந்து அங்குள்ள சூழ்நிலையைக் கண்ட பிறகு தான் இந்தக் கேள்வியை போட்டிருக்கிறார்கள் என்று நம்புகிறேன். ஆகவே கனம் அமைச்சர் அவர்கள் சட்டசபைக் கூட்டத்தையே இனிமேல் ஊட்டியில் நடத்துவதற்கும், அதன் மூலம் முதுமலையிலுள்ள டூரிஸ்ட் ஹோமை கட்டுவதற்கும் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.